BLESSING PATHWAY EDUCATION (OPC) PRIVATE LIMITED.
BLESSING POWER GUIDE
BLESSING TUITION & TUTORIAL CENTRE
No.12, Ganesh Apartment, Trust Square Street,Medavakkam, Ayanavaram, Chennai – 600023.
ISO 9001:2015 Certified Institution


12TH STD TAMIL

QUARTERLY EXAM QUESTION MODEL (1) – 2026 & 27

## பகுதி – I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14X1=14

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. "செம்பரிதி.........."எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு.
   அ) ஒளிப்பறவை ஆ) நிலவுப்பூ இ) சர்ப்பயாகம் ஈ) சூரியநிழல்
2. மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய சொல்லாய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு
   அ) மத்த விலாசம் ஆ) தமிழ்நாட்டு வரலாறு
   இ) அஞ்சிறைத் தும்பி ஈ) திசை எட்டும்
3. சென்னை வெறும் நகரம் மட்டுமன்று, அது நம்பிக்கை மையம் – காரணம்
   அ) நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகளின் களம்
   ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
   இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ, ஆ, இ – அனைத்தும்
4. " நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது" என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது.
   அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்
5. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு?
   அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
   இ) தினைத்துணை நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி
6. குடும்பம் என்னும் சொல் முதன் முதலில் இடம்பெற்றுள்ள நூல்
   அ) தொல்காப்பியம் ஆ) திருக்குறள் இ) குறுந்தொகை ஈ) புறநானூறு
7. தந்தனன் தாதை தன்னைத் *தடக்கையால்* எடுத்துச் சார்வான் அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு ----------
   அ) உரிச்சொல்தொடர் ஆ) வினைத்தொகை இ) உம்மைத்தொகை ஈ)இடைச்சொல் தொடர்
8. சிற்பி பாலசுப்பிரமணியம் இயற்றிய நூல்களுள் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்
   அ) சூரிய நிழல் ஆ) ஒரு கிராமத்து நதி
   இ) ஒளிப்பறவை ஈ) மௌன மயக்கங்கள்
9. "ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள் என்றெழுது" – என்று கூறியவர்.
   அ) பாரதிதாசன் ஆ) சுரதா இ) பாரதியார் ஈ) பாலசுப்பிரமணியம்
10. அண்ணா நூற்றாண்டு நூலகம் தொடங்கப்பட்ட ஆண்டு
    அ) 2009 ஆ) 2007 இ) 2008 ஈ) 2010
11. தமிழின் திணைப்பாகுபாடு ------------ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
    அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு
12. யார் மாட்டும் மறக்க வேண்டியதாக வள்ளுவர் கூறுவது
    அ) நகை ஆ) அழுகை இ) உவகை ஈ) வெகுளி
13. திருக்குறள் ஒழிபியலில் இடம்பெற்றுள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை
    அ) 25 ஆ) 32 இ) 13 ஈ) 14
14. செற்றவர் – இலக்கணக்குறிப்பு எழுதுக.
    அ) வினைமுற்று ஆ) பண்புத்தொகை
    இ) வினையாலணையும் பெயர் ஈ) தொழிற்பெயர்

## பகுதி – II (பிரிவு–1)

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட , தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.
17. இராமன் சுக்ரீவனிடம் கூறிய செய்திகளை எழுதுக.
18. எவற்றை வாயிலுக்கே சென்று வரவேற்க வேண்டுமென ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுகிறார்?

### பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4

19. "விரிபெரு தமிழர் மேன்மை ஓங்கிடச் செய்வ தொன்றே
    உயிர்ப்பணியாக் கொண்டோன்" – யார், யாரைப் பற்றி எதற்காகக் கூறுகிறார்?
20. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
21. சங்ககாலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?

### பிரிவு–3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

22. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) சாய்ப்பான் ஆ) தந்தனன்
23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    அ) புதுப்பெயல் ஆ) செந்தமிழே
24. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.
    அ) தாமரை இலை நீர்போல ஆ) எலியும் பூனையும் போல
25. கலைச்சொல் எழுதுக.
    அ) EPIGRAPHY ஆ) MUSEUM
26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    கலை, களை, கழை
27. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.
    குழந்தை, நட, தளிர்நடை, விழு

28.கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.

அ) முன் ஆ) தானே

29.வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக்கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லவனவற்றை கற்று கொடுக்கும்.

30.பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடராக ஆக்குக.

போட்டி வெற்றி பெற்று கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.

## பகுதி – III (பிரிவு–1)

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

32.எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது – குறள் வழி விளக்குக.

33.“வருபவர் எவராயினும் நன்றி செலுத்து” – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34.“செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்” – தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

## பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

35.மயிலை சீனி. வேங்கடசாமியின் வரலாற்று ஆய்வுகள் பற்றி விளக்குக.

36.சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

37.சென்னை அறிவின் நகரம் என்பதனைச் சான்றுகளுடன் விளக்குக.

38.தந்தையும் தாயும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

## பிரிவு–3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x4=12

39. அ) நிரல் நிறை அணியை விளக்குக.

(அல்லது)

ஆ) சினம் என்னும் சேர்ந்தாரைக்கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40.வாகைத்திணையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

41. இலக்கிய நயம் பாராட்டுக.

*பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி*
*பிறமொழிக்குச் சிறப்பளித்த பிழையை நீக்க*
*ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்*
*உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?*
*கற்றுணர்ந்தே அதன் இனிமை காண்பாய் என்று*
*கம்பனோடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்*
*தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட*
*தெய்வக்கவி பாரதி ஓர் ஆசான் திண்ணம்* – நாமக்கல் கவிஞர்

42.பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.

(அல்லது)

ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்.

43.தமிழாக்கம் தருக.

1. A new language is a new life.
2. If you want People to understand you, speak their language.
3. Knowledge of languages is the doorway to wisdom.
4. The limits of my language are the limits of my world.

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3x6=18

44. (அ) சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் – இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.

(அல்லது)

ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவுநிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) நீங்கள் வியந்து பார்த்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது – எவ்வாறு? விளக்குக.

46. (அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

(அல்லது)

ஆ) உரிமைத்தாகம் கதையில் வெளிப்படும் உறவின் மேன்மையைப் புலப்படுத்துக.

## பகுதி – V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4+2=6

47. அ) “துன்பு உளது” எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

ஆ) ‘மிகும்’ என முடியும் குறளை எழுதுக.

BLESSING PATHWAY EDUCATION (OPC) PRIVATE LIMITED.
BLESSING POWER GUIDE
BLESSING TUITION & TUTORIAL CENTRE
No.12, Ganesh Apartment, Trust Square Street,Medavakkam, Ayanavaram, Chennai – 600023.
ISO 9001:2015 Certified Institution
12TH STD TAMIL
QUARTERLY EXAM QUESTION MODEL (2) – 2026 & 27

## பகுதி – I

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

1. "நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது" என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது –
(அ) சூரிய ஒளிக்கதிர் (ஆ) மழைத்துளிகள்
(இ) மழை மேகங்கள் (ஈ) நீர்நிலைகள்
2. 'குடும்பம்' என்னும் சொல் முதன்முதலில் இடம்பெற்றுள்ள நூல் _______
(அ) புறநானூறு (ஆ) தொல்காப்பியம்
(இ) திருக்குறள் (ஈ) குறுந்தொகை
3. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு?
(அ) செய்யாமல் செய்த உதவி (ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
(இ) தினைத்துணை நன்றி (ஈ) காலத்தினால் செய்த நன்றி
4. "இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக" என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது _______
(அ) அவமானம் (ஆ) வக்கிரம் (இ) வஞ்சனை (ஈ) இவை மூன்றும்
5. "செம்பரிதி..." எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு _______
(அ) சர்ப்பயாகம் (ஆ) சூரியநிழல் (இ) நிலவுப்பூ (ஈ) ஒளிப்பறவை
6. சென்னை வெறும் நகரம் மட்டுமன்று, அது நம்பிக்கை மையம் – காரணம் _______
(அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
(ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
(இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
(ஈ) அ, ஆ, இ – அனைத்தும்
7. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தெரிவு செய்க.
(அ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
(ஆ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.
(இ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.
(ஈ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
8. தடக்கையான் – இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு _______
(அ) உரிச்சொல்தொடர் (ஆ) வினைத்தொகை
(இ) உம்மைத்தொகை (ஈ) இடைச்சொல் தொடர்
9. தமிழில் _______ பாகுபாடு பொருட்குறிப்பு அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
(அ) பால் (ஆ) திணை (இ) இடம் (ஈ) எண்
10. நடுவண் அரசு தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவித்த ஆண்டு _______
(அ) 2004 (ஆ) 2006 (இ) 2012 (ஈ) 2014
11. ஒருவருடைய செல்வம் குறையாமலிருக்க குறள் கூறும் வழி யாது?
(அ) பிறர் பொருளைக் கவரும் செயல்களைச் செய்தல்.
(ஆ) பிறர் செய்த உதவியை மறக்காமல் இருப்பது.
(இ) பிறருடைய கைப்பொருளை விரும்பாதிருத்தலாகும்.
(ஈ) தம் ஐம்புலன்களையும் வெல்லுதல்.
12. மருதன், புதியதாகத் தமிழ்ப் பள்ளி ஒன்றை நிறுவ திட்டமிடுகிறார். அப்பள்ளி பாரதியார் விரும்பிய வகையில் வளர வேண்டுமென்று ஆசைப்படுகிறார். அவருக்கு நீங்கள் பின்வருவனவற்றுள் எந்த ஆலோசனையைப் பரிந்துரைப்பீர்கள்?
(அ) அப்பள்ளியில் நவீன இயந்திரங்கள் இடம்பெற்றிருக்க வேண்டும்.
(ஆ) வீதிதோறும் பள்ளிகள் திறக்க வேண்டும்.
(இ) ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித்தனிப் பள்ளிகள் தொடங்க வேண்டும்.
(ஈ) அப்பள்ளியில் நவீன கலைகள் எல்லாம் பயிற்சியளிக்க வேண்டும்.
13. வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாகச் சூடும் பூ ___
(அ) கொன்றைப்பூ (ஆ) வாகைப்பூ (இ) தும்பைப்பூ (ஈ) காந்தள் பூ
14. பால் காட்டும் விகுதி இல்லாத சொல்லைத் தேர்க.
(அ) பாடினாள் (ஆ) வந்தார் (இ) தந்தை (ஈ) சென்றான்

## பகுதி – II

### பிரிவு –1

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×2=6

15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.
16. கூதிர்ப்பாசறை என்றால் என்ன?
17. 'முயல்வாருள் எல்லாம் தலை' என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?
18. இராமன் சுக்ரீவனிடம் கூறிய செய்திகளை எழுதுக.

### பிரிவு – 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×2=4

19. இந்தோ – சாரசனிக் கட்டடக்கலை – குறிப்பு வரைக.
20. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு எழுதுக.
21. தமிழர்களின் வரலாற்றில் 'இருண்ட காலம்' என மரபுவழிப்பட்ட வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடும் காலம் எது?

### பிரிவு – 3

எவையேனும் **ஏழனுக்கு** விடை தருக. 7×2=14

22. கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்கான பொருள் எழுதுக.
(அ) திரு (ஆ) ஏமம்
23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
(அ) விம்முகின்ற (ஆ) தந்தனன்
24. இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள் இரண்டினை எழுதுக.
25. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
கலை, களை, கழை
26. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
(அ) வானமெல்லாம் (ஆ) செல்லிடத்து
27. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.
குதிரை, வேகம், ஓடு, தாவு
28. உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.
எலியும் பூனையும்போல
29. பொருள்கோள் எத்தனை வகைப்படும்?

30. கலைச்சொல்லாக்கம் தருக.

(அ) Culture (ஆ) Software

**குறிப்பு:** செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.

மொழியின் அடிப்படை அலகுகள் யாவை?

## பகுதி – III

### பிரிவு –1

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×4=8

31. "சவுண்டதனை உடைத்தெழுந்த சிங்கம் போலக்
குளிர்பொதிகைத் தென்தமிழே! சீறி வா, வா!" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

33. எவற்றையெல்லாம்விட நன்றி உயர்ந்தது? – குறள்வழி விளக்குக.

34. கம்பராமாயணம் – நூற்குறிப்புத் தருக.

### பிரிவு – 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×4=8

35. மயிலை சீனி. வேங்கடசாமியின் வரலாற்று ஆய்வுகள் பற்றி விளக்குக.

36. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

37. தமிழர் பரம்பரை குறித்துக் குடும்ப மரம் ஒன்றை வரைக.

38. மணந்தகம் – விளக்குக.

### பிரிவு – 3

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×4=12

39. (அ) நிரல்நிறை அணியைச் சான்று தந்து விளக்குக.

**(அல்லது)**

(ஆ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.
– இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

40. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

'திராவிட சாஸ்திரி' என்று சி.வை. தாமோதரனாரால் போற்றப்பட்டவர் சூரியநாராயண சாஸ்திரி. இவர், பெற்றோர் தனக்கு இட்ட பெயரான சூரியநாராயண சாஸ்திரி என்ற வடமொழிப் பெயரைத் தமிழில் பரிதிமாற் கலைஞர் என்று பெயர்மாற்றம் செய்துகொண்டார். தமிழ், தமிழர் முன்னேற்றம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றுவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டிருந்தார்.

தமிழை உயர்தனிச் செம்மொழி எனத் தன் பேச்சின்மூலம் முதன்முதலில் மெய்ப்பித்தவர் இவரே. உயர்தனிச் செம்மொழி என்பதற்கு இவர் தரும் விளக்கம், "பலமொழிகட்குத் தலைமையும் மிக்க மேதமையும் உடைய மொழி உயர்மொழி; தனித்து இயங்கவல்ல ஆற்றல் சார்ந்தது தனிமொழி; திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தாய்மொழி செம்மொழி; ஆயின் தமிழ் உயர்தனிச் செம்மொழியாம்" என்பதாகும்.

**வினாக்கள்**

1. 'திராவிட சாஸ்திரி' என்று பரிதிமாற் கலைஞரைப் போற்றியவர் யார்?
2. தமிழை, உயர்தனிச் செம்மொழி எனத் தன் பேச்சின்மூலம் முதன்முதலில் மெய்ப்பித்தவர் யார்?
3. சாஸ்திரி என்னும் சொல்லுக்குப் பத்தியில் காணப்படும் தமிழ்ச்சொல் யாது?
4. 'செம்மொழி' என்பதற்கு விளக்கம் தருக.

41. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிக்க.

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, கவிமணி, மறைமலை அடிகள்)

1. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம் ________
2. கவிஞர்; ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம் ________
3. தாய்மொழி; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும் ________
4. தமிழறிஞர்; முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம் ________

42. இலக்கிய நயம் பாராட்டுக.

(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

**– தண்டி**

43. தட்டச்சர் பணி வேண்டி விண்ணப்பம் ஒன்றினை எழுதுக.

## பகுதி – IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 3×6=18

44. (அ) 'சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும்' – இக்கூற்றை முப்பால்வழி விரித்துரைக்க.

**(அல்லது)**

(ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவுநிலையை நும் பாடப்பகுதிவழி நிறுவுக.

45. (அ) மயிலை சீனி. வேங்கடசாமி ஓர் 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்பதனைச் சான்றுகளுடன் நிறுவுக.

**(அல்லது)**

(ஆ) சென்னை 'அறிவின் நகரம்' என்பதைச் சான்றுகளுடன் விவரிக்க.

46. (அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

**(அல்லது)**

(ஆ) 'தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்' என்னும் தலைப்பில் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை – தாய்மொழிக் கல்வியின் தேவை – தாய்மொழிச் சிந்தனை – கற்கும் திறன் – தாய்மொழிக் கல்வியின் பயன் – முடிவுரை.

## பகுதி – V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4+2=6

(அ) "மாமேயல....." எனத் தொடங்கும் நெடுநல்வாடைப் பாடலை எழுதுக.

(ஆ) "வையத்துள்....." எனத் தொடங்கும் குறளை எழுதுக.

*************

BLESSING PATHWAY EDUCATION (OPC) PRIVATE LIMITED.
BLESSING POWER GUIDE
BLESSING TUITION & TUTORIAL CENTRE
No.12, Ganesh Apartment, Trust Square Street,Medavakkam, Ayanavaram, Chennai – 600023.
ISO 9001:2015 Certified Institution

12 TH STD TAMIL

QUARTERLY EXAM QUESTION MODEL (3) – 2026 & 27

## பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **14×1=14**

1) கண்ணாடியாகும் கண்கள் என்னும் கவிதைத் தொகுப்பின்ஆசிரியர்
அ) சிற்பி ஆ) பிரமிள் இ) அய்யப்ப மாதவன் ஈ) நகுலன்

2) சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க
அ) கடுக்காய் ஆ) வசம்பு
இ) மாவிலைக்கறி ஈ) மணத்தக்காளி இலைச் சாறு

3) குடும்பம் என்னும் சொல் முதன் முதலில் இடம் பெற்றுள்ள நூல்
அ) தொல்காப்பியம் ஆ) குறுந்தொகை இ) புறநானூறு ஈ) திருக்குறள்

4) இவற்றை வாயிலுக்கே சென்று என் முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுதீன் ரூமி குறிப்பிடுவது
அ) வக்கிரம் ஆ) அவமானம்
இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

5) கீழ்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளை எழுதுக
உயர் அலுவலரின் வருகை
அலுவலகமே அல்லாடும்
அவருடைய சினம் அனைவரும் அறிந்ததே
கோப்புகளை விரைந்து முடிக்க
ஒழுங்கு செய்ய
நேரத்தில் இருக்க வேண்டும்
விரைகிறது மனம்
பரபரப்பு மனவழுத்தமுமாய்
வண்டியை எடுக்கிறேன்
காலைக் கட்டிக் கொள்கிறது குழந்தை
'போ அந்தப் பக்கம்'
உதறிச் செல்கிறேன் குழந்தையை
அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்
ஆ) செல்லிடத்தில் காப்பான் சினம்காப்பான் அல்இடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்.
இ) இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை

6) பொருத்துக
அ) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) விலங்குகள் - 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன
இ) பறவைகள் - 3) குளிரால் நடுங்கின
ஈ) பசுக்கள் - 4) மேய்ச்சலை மறந்தன
அ) 1, 3, 4, 2 ஆ) 3, 4, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

7) ச.த. சற்குணரின் உரை ஏற்படுத்திய ஆர்வத்தினால் மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்.
அ) பௌத்தமும் தமிழும் ஆ) இஸ்லாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்துவமும் தமிழும்

8) மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ், இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயங்களைத் தேர்க.
அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை
இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை

9) கல்வியை நிலைக்களனாகக் கொண்ட மெய்ப்பாடு
அ) பெருமிதம் ஆ) உவகை இ) நகை ஈ) மருட்கை

10) 18 வயது முழுமை பெறாதவர் வாகனத்தை இயக்கினால், அவரின் பெற்றோருக்குத் தண்டத்தொகை எவ்வளவு?
அ) 22 ஆயிரம் ரூபாய் ஆ) 20 ஆயிரம் ரூபாய்
இ) 10 ஆயிரம் ரூபாய் ஈ) 25 ஆயிரம் ரூபாய்

11) 'குளிமாற்று' - என்னும் சொல்லோடு தொடர்புடைய துறை
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

12) அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை
அ) 70 ஆ) 38 இ) 25 ஈ) 133

13) திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம்
அ) திருச்சிராப்பள்ளி ஆ) திருநெல்வேலி இ) வேலூர் ஈ) சென்னை

14) தொல்நெறி - இலக்கணக் குறிப்பு தருக
அ) எண்ணும்மை ஆ) பண்புத் தொகை
இ) அன்மொழித் தொகை ஈ) வினையெச்சம்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** **3×2=6**

15) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16) ஞாலத்தின் பெரியது எது?
17) எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுதீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
18) சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்** **2×2=4**

19) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக
20) சங்ககாலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?
21) அக்காலத்துக் கல்வி முறையில் மனைப் பயிற்சிக்கு உதவிய நூலகள் யாவை?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழுவினாக்களுக்கு விடையளிக்கவும்.** **7×2=14**

22) திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

23) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக**
அ) வியந்து ஆ) பொலிந்தான்

24) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக**
அ) தலைக்கோல் ஆ) புதுப்பெயல்

25) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக**
அ) கலை, களை, கழை

26) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக**
என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்

27) **தொடரில் இடம் பெற்றுள் மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக**
வாழைக்காட்டில் குயில்கள் அலறிக் கொண்டும் காகங்கள் கூவிக் கொண்டும் இருந்தன

எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியது

29) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க**

தலைமை (அல்லது) வெங்காயம்

30) **உவமைத் தொடரைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக**

உள்ளங்கை நெல்லிக்கனி போல

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** **2×4=8**

31) சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக

32) 'செம்பருதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான். செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்'-தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக

33) ஒருமுக எழினி, ஒருமுக எழினி கரத்துவரல் எழினி - விளக்குக

34) இராமன் சுக்ரீவனிடம் கூறிய செய்திகளை எழுதுக

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** **2×4=8**

35) மயிலை சீனி.வேங்கடசாமியின் வரலாற்று ஆய்வுகள் பற்றி விளக்குக

36) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக

37) தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

38) நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** **3×4=12**

39) இலக்கிய நயம் பாராட்டுக். மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக

முச்சங்கங் கூட்டி
  முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
  அளப்பரிய பொருள் கூட்டி
சொற்சங்க மாகச்
  சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
  அமைத்த பெருமாட்டி

- கண்ணதாசன்

40) அ) நிரல்நிறை அணியை விளக்குக.

**(அல்லது)**

ஆ) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும் - குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக

41) **பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக**

அ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

**(அல்லது)**

ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

42) **கீழ்க்காணும் பத்திகளைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்குக**

இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவுப் பழக்க வழக்க மாற்றம் உள்ளிட்டவையே பல்வேறு உடல் நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாகின்றன. மருத்துவம் சார்ந்த தேவைகளுக்கு என்று குறிப்பிட்ட தொகையை ஒதுக்கும் அளவிற்கு உடல் நிலையைக் கவனத்தில் கொள்ளாமல் ஓர் இயந்திர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

'உணவே மருந்து மருந்தே உணவு' என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.

உணவுப்பொருள்களில் அடங்கியுள்ள சத்துகள், அவற்றின் பயன்கள் ஆகியவற்றைப் பற்றிய தெளிந்த அறிவு, ஆரோக்கிய உணவினைத் தேர்வு செய்ய மிகவும் உதவியாய் இருக்கும்.

தேவையான தானியங்களுடன் பருப்பு மற்றும் பயறு வகைகளைச் சேர்த்து, அதிக காய்கறிகளுடனும் பழங்களுடன் கூடிய உணவு முறையே நம் ஆரோக்கியத்திற்கான சரியான தீர்வு

43) **தமிழாக்கம் தருக**

1) Learning is a treasure that will follow its owner everywhere
2) A new language is a new life
3) Knowledge of languages is the doorway to wisdom
4) The limits of my language are the limits of my world

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44) அ) செய்நன்றியறிதலே அறம் என்பதை வாயுரை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக

**(அல்லது)**

ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவுநிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக

45) அ) மயிலை சீனி. வேங்கடசாமி ஓர் 'ஆராய்ச்சி பேரறிஞர்' என்பதனைச் சான்றுடன் நிறுவுக

**(அல்லது)**

ஆ) புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரி செய்யக்கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக

46) அ) 'உரிமைத் தாகம்' கதையில் வெளிப்படும் உறவின் மேன்மையைப் புலப்படுத்துக

**(அல்லது)**

ஆ) சூரியனைப் பிரசவிக்கும் பாறை' எனும் சிறுகதை உணர்த்தும் கருத்துக்களைச் சுவை குன்றாமல் சுருக்கி வரைக.

## பகுதி - V

47) **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக** **4+2=6**

அ) 'குகனொடும் ஐவர்' - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக

ஆ) 'நன்று' - என முடியும் குறள்